ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி

# 9.7 – தந்தைதாய்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_{3}$மாந்தமஹாதே$_{3}$ஶிகாய நம:

# 9.7 – தந்தைதாய்

‡ தந்தை தாய் மக்களே ⋆
சுற்றம் என்றுற்றவர் பற்றி நின்ற ⋆
பந்தம் ஆர் வாழ்க்கையை ⋆
நொந்து நீ பழி எனக் கருதினாயேல் ⋆
அந்தம் ஆய் ஆதி ஆய் ⋆
ஆதிக்கும் ஆதி ஆய் ஆயன் ஆய ⋆
மைந்தனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ‖ **9.7.1** ‖

மின்னு மா வல்லியும் வஞ்சியும் வென்ற ⋆
நுண் இடை நுடங்கும் ⋆
அன்ன மென் நடையினார் கலவியை ⋆
அருவருத்தஞ்சினாயேல் ⋆
துன்னு மா மணி முடிப் பஞ்சவர்க்காகி ⋆
முன் தூது சென்ற ⋆
மன்னனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ‖ **9.7.2** ‖

பூண் உலாம் மென் முலைப் பாவைமார் ⋆
பொய்யினை மெய் இதென்று ⋆
பேணுவார் பேசும் அப்பேச்சை ⋆
நீ பிழை எனக் கருதினாயேல் ⋆
நீணிலா வெண் குடை வாணனார் ⋆

வேள்வியில் மண் இரந்த ⋆
மாணியார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.3** ॥

பண் உலாம் மென் மொழிப் பாவைமார் ⋆
பணைமுலை அணைதும் நாம் என்று ⋆
எண்ணுவார் எண்ணம் அதொழித்து ⋆
நீ பிழைத்துய்யக் கருதினாயேல் ⋆
விண் உளார் விண்ணின் மீதியன்ற ⋆
வேங்கடத்துளார் ⋆
வளங்கொள் முந்நீர் வண்ணனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.4** ॥

மஞ்சு தோய் வெண் குடை மன்னராய் ⋆
வாரணம் சூழ வாழ்ந்தார் ⋆
துஞ்சினார் என்பதோர் சொல்லை ⋆
நீ துயர் எனக் கருதினாயேல் ⋆
நஞ்சு தோய் கொங்கை மேல் அங்கைவாய் வைத்து ⋆
அவள் நாளை உண்ட ⋆
மைந்தனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.5** ॥

உருவின் ஆர் பிறவி சேர் ⋆
ஊன் பொதி நரம்பு தோல் குரம்பையுள் புக்கு ⋆
அருவி நோய் செய்து நின்றைவர் தாம் ⋆
வாழ்வதற்கஞ்சினாயேல் ⋆
திருவின் ஆர் வேதம் நான்கைந்து தீ ⋆
வேள்வியோடங்கம் ஆறும் ⋆

மருவினார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.6** ॥

நோய் எலாம் பெய்ததோர் ஆக்கையை ⋆
மெய் எனக் கொண்டு ⋆
வாளா பேயர் தாம் பேசும் அப்பேச்சை ⋆
நீ பிழை எனக் கருதினாயேல் ⋆
தீ உலா வெங்கதிர்த் திங்களாய் ⋆
மங்குல் வான் ஆகி நின்ற ⋆
மாயனார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.7** ॥

மஞ்சு சேர் வான் எரி ⋆
நீர் நிலம் கால் இவை மயங்கி நின்ற ⋆
அஞ்சு சேர் ஆக்கையை ⋆
அரணம் அன்றென்றுய்யக் கருதினாயேல் ⋆
சந்து சேர் மென்முலைப் ⋆
பொன்மலர்ப் பாவையும் தாமும் ⋆
நாளும் வந்து சேர் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.8** ॥

வெள்ளியார் பிண்டியார் ⋆
போதியார் என்றிவர் ஓதுகின்ற ⋆
கள்ள நூல் தன்னையும் ⋆
கருமம் அன்றென்றுய்யக் கருதினாயேல் ⋆
தெள்ளியார் கை தொழும் தேவனார் ⋆
மாமுநீர் அமுது தந்த ⋆

வள்ளலார் வல்லவாழ் ⋆
சொல்லுமா வல்லை ஆய் மருவு நெஞ்சே ! ॥ **9.7.9** ॥

‡ மறைவலார் குறைவிலார் உறையும் ஊர் ⋆
வல்லவாழ் அடிகள் தம்மைச் ⋆
சிறை குலா வண்டறை சோலை சூழ் ⋆
கோல நீள் ஆலி நாடன் ⋆
கறை உலா வேல் வல்ல ⋆
கலியன் வாய் ஒலி இவை கற்று வல்லார் ⋆
இறைவர் ஆய் இரு நிலம் காவல் பூண்டு ⋆
இன்பம் நன்கெய்துவாரே ॥ **9.7.10** ॥

அடிவரவு — தந்தை மின்னும் பூண் பண் மஞ்சு உருவின் நோய் மஞ்சுசேர் வெள்ளியார் மறை முந்துற

தந்தைதாய் முற்றிற்று

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்